0118

உ

திருக்கேதீஸ்வரம்

# திருவாசக சுவாமிகள்

✲

தொகுப்பு:

"ஆழ்கடலான்"

✲

வெளியீடு:

அன்பர்கள்

28-03-87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200 | 116.

உ

திருக்கேதீஸ்வரம்

# திருவாசக சுவாமிகள்

## (சபாரத்தின சுவாமிகள்)



வெளியீடு:

**அன்பர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சமர்ப்பணம்

இறைவனை அடைதலே இலட்சியமாகக் கொண்டு தன் வாழ்க்கையை அதற்காகவே அமைத்துக் கொண்டு வாழ்ந்த வாழ்கின்ற உத்தமர்களை அவர்களின் வாழ் நாளிலேயே இனங் கண்டு அவர்களின் இலட்சியத்தையும் சிரத்தையையும் வாழ்க்கையையும் அவர்களின் தொடர்பினால் எமக்கு ஏற்பட்ட தெய்வீக நாட்டத்தையும் அனுபவங்களையும் நினைந்து உணர்ந்து நன்றிப் பெருக்குடன் மற்றவர்களும் பயன்பெற வேண்டும் என்ற நல்ல நோக்குடன் இந்நூலை வெளியிடுகிறோம்.

**திருவாசகம்** இலட்சியத்தை அடைய வழிகாட்டி. மூச்சுப் பேச்சு செயல் எல்லாமே திருவாசகந்தான். அதனால் சமய வாழ்வில் ஏற்படக்கூடிய சந்தேகங்கள் மற்றும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அறிவு ஒளி ஏற்றும் வேதம் திருவாசகந்தான் எனக் கொண்டு வாழ்ந்தவர் வாழ்கின்றவர் எங்கள் வணக்கத்துக்குரிய திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தினச் சுவாமிகள். அவர்களின் எண்பத்தி நான்காவது பிறந்த நாளுடன் இந்நூலை வெளியிடக் கிடைத்த வாய்ப்பு நாம் செய்த தவம்.

அன்னாரின் திருப்பாதங்களில் இதை சமர்ப்பிக்கிறோம்.

**அன்பர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு. சபாரத்தினம் சுவாமிகள்



புரங் கடந்தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங் கிடெந்தா யென்றிரப்பத் தன்னிரடிக் கென்னிரண்டு
கரங்கள் தந்தா னொன்று காட்டிட மற்றதும் காட்டிடென்று
வரங்கிடந்தான் றில்லையம்பல முன்றில மாயவனே.

— திருக்கோவையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிவெள்ளம் அரவணைத்தது

இரா. மகேந்திரசிங்கம்

கண்ட ஆனந்தக் கடலினைக் கண்களால் முகந்து
கொண்டு கைகுவித் தெதிர்விழுந் தெழுந்துமெய்குலைய
அண்டர் முன்புநின் ருடினர்; பாடினர்; அழுதார்
தொண்ட னூர்க்கிங்கு நிகழ்ந்தன யார்சொல்ல வல்லார்?

கயிலைக் காட்சியைக் கண்ட திருநாவுக்கரசு நாயனரின் நிலையை விளக்கும் பதிகம் இது. இதேபோன்ற காட்சியைத் திருவாசக சுவாமிகளும் அனுபவித்திருந்தார். எம்பெருமானின் ஆணையை ஏற்று சிதம்பரத்தின் தெற்கு வாயிலால் உள்ளே நுழைந்த சுவாமிகளை ஒரே ஜோதிவெள்ளம் அரவணைத்துக்கொண்டது. கண்களில் அருவிநீர் சொரியக் கைமலர் உச்சிமேற் குவித்தபடி உணர்விழந்து விழுந்தார். உணர்வு வரத்தொடங்கியதும் நடராஜப் பெருமானின் திருவுருவம் பொன்மயமாகவும், பின்னர் வெள்ளி, செம்பு, இரும்பாகவும் தோற்றமளித்ததாம். இந்நிகழ்ச்சியை நினைவு கூரும்பொழுதெல்லாம் சுவாமிகள் புளகாங்கிதம் அடைந்து சிதாகாய வெளியில் உலாவத் தொடங்கிடுவார்.

வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டத்தில் சுவாமிகளும் ஒருவர். திருவாசகத்தில் ஒரு பாடல்கூடத்தெரியாதநிலையில் இருந்த சுவாமிகளுக்கு எம்பெருமானே திருவாசகத்தில் இருந்து ஒரு வரியை உணர்த்திவைத்தார் என்றால் சுவாமிகளின் மகிமை அளப்பரியது. திருவாசகத்தில் சுவாமிகளுக்குத்தெரியாத பாடல்களே இல்லை. திருவாசகத்தின் புறக் கருத்துக்களே மானிடர்களுக்குத் தேனாக இனிக்கும்பொழுது அவற்றுக்குச் சுவாமிகள் கூறும் அகக்கருத்துக்கள் நிச்சயம் தேனிலும் தேனாக இனிக்கும்.

ஆசையினாலேயே பிறவி ஏற்படுகின்றது. பிறவி அறுக்க ஆசையறுத்தல்வேண்டும். ஆசைக்கெல்லாம் காரணம் ஐம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன்களைக் கட்டியாளாமையே. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இந்த ஐம்புலன்களும் தைக்கக்கூடியது. அதாவது சிந்தை புலன்வழி சென்று ஆசையை ஏற்படுத்துகின்றதென் பதை ''தையலார் எனும் சுழித்தலைப்பட்டு'' என்ற வரி விளக்குகின்றது என்று பின்வரும் அற்புதப் பத்துப் பதிகத் துக்கு சுவாமிகள் விளக்கம் கொடுத்தார்.

''மையலாயிந்த மண்ணிடை வாழ்வெனு
மாழியு ளகப்பட்டுத்
தையலாரெனுஞ் சுழித்தலைப்பட்டு நான்
றலைதடு மாறுமே''... ..

''பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
ஏத்தி இரும்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்''

என்ற திருவெம்பாவை வரிக்கு சுவாமிகள் கூறும் விளக்கம் அற்புதமானது. இரும் சுனை நீரென்பது குற்றம் குறை வற்ற, இன்பம், துன்பம் அற்ற நிலை. ''இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே'' என்று இறைவன் விளிக்கப்படு கின்றான். அப்பேற்பட்ட இறைவனை அடைதற்குப் பேத மற்ற மனநிலை அவசியமாகும். எது நடந்தாலும் அவன் செயல் என்று நினைந்து, குற்றம் குறைகளைப் பேசாது சிரித்துத் தொழுபவர்களுக்கே அவன் பாதம் மின்னிப் பொலியும் என்று கூறும் சுவாமிகள், திருவெம்பாவை சக்தி யின் எழுப்பும் பாடல்கள் என்றும் தியானத்தை எவ்வாறு செய்தல்வேண்டும் என்று இறைவனால் கூறப்பட்ட விளக் கங்கள் அடங்கிய பதிகங்கள் என்று விளம்புவார்.

போற்றி என்பது மனக்குகையில் உள்ள தீ. அதாவது ஜோதி எனப் பொருள்படும் என்றும், ''மால் நான்முகனும் காணாத புண்டரிகம் போற்றி, யாமுய்ய ஆட்கொண்டரு ளும் பொன்மலர்கள் போற்றி எனப் பிரித்துப் படிக்கும் பொழுது அதில்வரும் போற்றி வணக்கத்தைக் குறிக்காது அந்த ஜோதிமயமான இறைவனையே குறிக்கின்றது என்றும் விளக்கம் கொடுத்தார்கள்.

இவ்வாறு சுவாமிகள் கூறும் திருவாசக விளக்கங்கள் எண்ணிறந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு''

என்றதன்படி சுவாமிகளின் தெய்வீக நிலையை அவரின் முகம் காட்டி நிற்கின்றது. நோயினால் உடல் வருந்தும் பொழுதும் கூட முகத்தில் அந்த தேஜஸ்ஸைக் காணக்கூடிய தாயிருக்கும். சுவாமி, உடலுக்கு மருந்து எடுத்தால் நல்லது என்று கூறினால், தம்பி இது மருந்தினால் மாற்றக் கூடிய நோயல்ல! வினை ஒழிந்துபோகட்டும் என்று கூறி திரு வாசகத்தைப் படிக்கத் தொடங்கிவிடுவார்.

"எல்லாப் பொருளு முடிக்கலா மீசன்றன்
தொல்லையருள் பெற்றக் கால்."

என்பது சுவாமிகளை நேரில் காண்பவர்களுக்கு வெள்ளிட மலை.

''இறைவன் அடியவர்க்கு எளியவன். நான் அற்ற நிலை யில் இறைவனைத் தொழுபவர்க்கே எல்லாம் வெளிச்சம். புறத்திலே ஆடல் பாடல் ஏதுக்கடா, அகத்தை நோக்கித் தியானத்தில் அமர்ந்திடடா, அவன் கழல் மின்னிப் பொலி யுமடா'' என்பதே சுவாமிகளின் தாரக மந்திரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சாயி ராம்

# ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள்

## செ. ஞானசேகரம்

ஸ்ரீ சபாரத்தின சுவாமிகளை முதல்முதலில், ஏறக்குறைய பத்து வருடங்களுக்கு முன் சந்தித்தேன். திருவாசகம் வே. சிவஞானம் என்னை அவருக்கு அறிமுகம் செய்தார். அப்பொழுது அவர் திடகாத்திரமாகத்தான் இருந்தார். நிமிர்ந்த உடல், காவி வேட்டியும் சால்வையும் அணிந்திருந்தார். வேறொரு வேஷத்தையும் காணவில்லை. திருக்கேதீஸ்வரத்திலுள்ள அவரது கொட்டிலில் வாங்குகள் போலப் பலகைகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றில் அமர்ந்தோம். வரவேற்றுத் தேநீர் தந்தார். இரண்டொரு வசனம் பேசி முடியுமுன்னமே, அவர் கண்களை மூடி நாடியை உயர்த்தி, மேலே நோக்குவதுபோல், நாம் பேசின பேச்சிற்கமைந்த திருவாசகம் ஒன்றைப் பாடினார்.

அவருடைய பாட்டு ஒரு புதுவிதமாயிருந்தது. ராகம் எதுவும் இல்லை. வசனங்கள் தத்ரூபமாய், சொற்கள் சாதாரணமான முறையிலல்லாது ஒன்றோடொன்று இணைக்கப் பட்டுப் புதிய கருத்தைத் தருவதாக வந்தது. ஒரு திருவாசகத்திலிருந்து இன்னொரு திருவாசகத்திற்குத் தொத்தினார். நாம் சாதாரணமாய் அத்திருவாசகத்தின் கருத்தாக எதை எண்ணுவோமோ, அதற்கப்பால்தான் அவருடைய கருத்துக்கள் இருந்தது. அதிசயமாயிருந்தது. அவர் சில திருவாசகங்களிலிருந்து அர்த்தம் எடுப்பது ஒரு விசித்திரமதானம். அவரிடத்து அன்பர்கள் ஈர்க்கப்படுவதும் அதனால்தான்.

முற்காலத்திலே சீனதேசத்திலே ஒரு ஓவியர் மரம் ஒன்றின் படத்தை வரைவதானால், அவர் அந்த மரத்தின்முன் போயிருந்துவிடுவார். பலநாட்களாக இருந்து, தான் அந்த மரமாகிவிட்டதன் பின்னரே ஓவியத்தை வரையத் தொடங்குவார். அதாவது, தன்னை மறந்து, மரத்தினுடைய எல்லா அம்சங்களிலும் ஊறி, தான் மரமாகிக்கொண்டு ஓவியத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையத் தொடங்கும் பொழுது, மரத்தின் நுட்பங்களையும் அமைப்பையும் அழகையும் பெருமளவில் ஓவியமாக வடிக்கக் கூடியதாயிருக்கும், ஸ்ரீ சபாரத்தின சுவாமி வேறு எந்த ஆத்மீக நூல்களிலும் தன் மனத்தை அதிகம் செலுத்தாது திருவாசகத்தையே தான் முற்றும் முழுதுமாய் அறியவேண்டிய நூலென்று கருதினர். திருவாசகங்களை எடுத்துக் கொண்டு, கண்களை மூடி, பிறர் முன்னிலையிலேயே தன்னுள் மூழ்கி எடுத்த கருத்துக்களைப் பிறர்க்குச் சொல்வதே தன் சேவையாகவும் இன்பமாகவும் ஆக்கிக்கொண்டார். ஆழமானதும் தெளிவானதுமான கருத்துக்களே வெளிவந்தன. நாளும் பொழுதும், எத்தனையோ ஆண்டுகளாய் "திருவாசகம் திருவாசகம், திருவாசகம்" இப்படிக் கண்களை மூடிக் கருத்துச் சொல்லி "ஏனையா, அப்படித்தானே" என்று முடிப்பார்.

அவருக்குத் திருவாசகமே தியானம், திருவாசகமே யோகம், திருவாசகமே ஞானம். எவர் வந்து எதை அவரோடு பேசினலும் அவர் ஓரிரு வசனமே பேசுவார், அடுத்து அந்தப் பேச்சின் கருத்துக்கிணைந்த திருவாசகம் ஒன்றை எடுத்துப் பாடத் தொடங்குவார்.

எதுவாயினும் ஒரு பொருளைப் பற்றிக்கொண்டு உள் நோக்கி ஆராய்ந்துகொண்டு போனல் அது இறைவனிலேயே போய்முடியும். அதேபோல் ஸ்ரீ சுவாமியும் வேதசாஸ்திரங் கற்று அனுபவமாய் வரவேண்டிய அறிவை திருவாசகம் ஒன்றையே தியானிப்பதன்மூலம் பெற்றிருக்கிருர். வாழ்க்கையின் லட்சியத்தை அறிந்து அதைப் பெருமளவில் தேடுபவர்.

அடியார்கள் சந்நிதி அவர் அகமகிழ்ந்து உறையுமிடம்.

நான் கண்டதில் அவருக்கு ஒரு வாஞ்சை உண்டானல் அது நல்ல அடியார்கள் நடுவிலிருப்பதுதான். நல்ல அன்பர்களைப்பற்றி அவருக்குச் சொல்லவந்தால் குழந்தையைப் போல் ஆவலோடு "அவர்கள் எங்கே ஐயா உள்ளனர்? அவர்களைச் சந்திக்கவேண்டும்" என்று துடிப்பார், அண்மையில் நாங்கள் அவரை திருநெல்வேலி இராமகிருஷ்ண மடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கச் சென்றோம். எங்களைக் கண்டதும் "ஒரு அதிசயம் கண்டேன்" என்று கத்திவிட்டார். "அடியார்கள்...... அதிசயங்கண்டேன்" என்று திருவாசகத்தைப் பாடியபின் தான் எங்களோடு பிரியமாய் அன்புவழியப் பேசினார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலேயோடு வந்திருக்கிறீர்கள் அதைப்போய் நன்றாகச் செய்யுங்கள் என்று, அவரிடம் விடைபெறும்போது ஒவ்வொருவருக்கும் சொல்லி அனுப் புவார்.

தான் திருக்கேதீஸ்வர மடத்தில் திருவாசக மடம் கட்டு வதில் ஈடுபட்டிருக்கும்பொழுது அங்கே பெண்கள் இருக்கும் பகுதியில் ஒரு மூலை தடுமாற்றம் உள்ளவர் குளப்படி செய் கிறார் என்று அறிந்து அவரைப் போய்க் கையில் பிடித் தாராம். அப்பொழுது நல்ல தைரியசாலியாகவும் இருந் தாராம். ஆயினும் அந்தநபர் மடத்தைக் கட்டி மடை வேலே செய்யவோடா திருக்கேதீஸ்வரம் வந்தாய்" என்று தனது கன்னத்தில் அறைந்தாராம். தனக்கு அறிவுவரச் சிறிதுநேரம் சென்றதாம். அடித்தவரைப் பிறகு என்றும் காணவில்லை. "அன்றுடனே அந்தப் பக்கமும், எந்தப் பக்கமும் போவதை நான் விட்டுவிட்டேன்" என்று அண்மை யில் நான் கண்டபொழுது சொன்னார்.

ஐந்து வருடங்களுக்குமுன் எமது இல்லத்தில் ஞானசம்பந் தர் அற்புதப் பதிகங்கள் பஞ்சாட்சர ஜபத்தோடு பாடி அக்கினி வளர்த்து ஒரு வழிபாடு செய்தோம். மாலை 6 மணி தொடக்கம் 9 மணிவரை தொடர்ந்து 41 நாட்கள் நடந்தது. திருவாசகம் வே. சிவஞானம் தினமும் வழிபாட் டின் ஒரு கட்டத்தில் திருவாசகப் பதிகம் ஒன்று படிப்பார். சிற்பி சிவப்பிரகாசம் அவர்கள் கண்ணீர் வடித்துக்கொண் டிருப்பார். சிவப்பிரகாசம் அவர்களிடம் ஓமகுண்ட அமைப் பைப்பற்றி அறியப்போனவிடத்தில் அவர் முதல்நாளன்று மாத்திரம் வந்து பார்க்க விரும்பினார். அந்த நாட்கள் பனி காலமுமாதலால், மாலை முழுவதும் தொய்வு இழுப்பு இருந்த தால் தொய்வுமாத்திரை கொண்டுவந்து போடுவதற்கு நீர் கேட்டவர், அது தேவையில்லாததுபோல் தோன்றவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று போடவில்லை, அன்று இழுப்பு வரவுமில்லை. அடுத்த நாள் வந்தார் இல்லை. அந்த அதிசயத்தைக் கண்டு பின் 41ம் நாளன்றுவரை அவரும் வந்தார், தொய்வும் வரவில்லை. 41ம் நாளன்று இரவு பூராவும் வழிபாடு நடந்தது வழி பாட்டை அதிகாலை நான்கு மணியளவில் முடித்துக்கொண்டு இரவெல்லாம் எங்களோடு இருந்த ஸ்ரீ சபாரத்தின சுவா மியை கொஞ்சம் திருவாசகம் படிக்கும்படி கேட்டேன். அன் றுதான் ஸ்ரீ சபாரத்தின சுவாமியின் அதிசயத் தகைமையைக் கண்டோம். திருவாசகத்திலிருந்து வியத்தகு புதுக்கருத் துக்களை கறந்தளித்தார். நடராஜமூர்த்தியாகவே காட்சி யளித்து திருவாசகங்களை பெரிய நாடகமாகவே ஆடவிட் டார். எம்மை ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கடித் தார். அக்காட்சி மறக்கமுடியாததொன்று. அந்தக்காட் சியை திருவாசகம் சிவஞானம் அவர்கள் முகமலர்ந்து அடிக்கடி எமக்கு நினைவூட்டுவார். சுவாமிக்கு உண்மை யான அடியார்கூட்டமும் பரிசுத்தமான ஆத்மீகச் சூழ்நிலை யும் ஏற்பட்டால் இன்றும் அப்படிப்பட்ட காட்சியை அவ ரிடத்தில் காணப்பெறலாம். வீண்புகழைச் கிஞ்சித்தும் விரும்பாதவர். தன் கருமமாகிய விடுதலையில் கருத்தாயுள் ளவர் என்பது அந்த நாட்டமுள்ளவர்களுக்குத் தெட் டெனத் தெரியும். நல்லடியார்கள் இல்லையே என்று ஏங்கு வார். துறந்தவர்களுடைய பெருமையை அவர் அறிவார்.

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக சுவாமிகள்

— ஆழ்கடலான் —

## 1. உண்டாலம்ம இவ்வுலகம்

உலகம் நடைபெறுகிறது எதனுல் என்ற வினுவுக்குப் பதில் பன்முகமாகக் கிடைக்கலாம். விஞ்ஞானத்தினுல் அரசியற் கோட்பாடுகளமைந்த இறைமையினுல், பொருளாதார விற்பன்னர்களால், உழைப்பாளிகளின் கையினுல், சிந்தனையாளர்களின் திறமையினுல் என்று பல்கோணங்களிலிருந்தும் விடை வரலாம் ஆனுல் பூரணமான பதிலாக அது அமையுமா என்ற வினு பின்னணியில் எதிரொலிக்கவும் செய்யலாம். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்பர். ஆமாம் பலநூறு தசாப்தங்கட்கு முன்னரே உண்டாலம்மா இவ்வுலகம் என்று துவங்குகிருர் இளம்பெருவழுதியார். தமக்கென்று முயலாத வலியு பெருமுயற்சி உள்ளவர்களாய்த் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவர்கள் இருத்தலால் உண்டு இந்த உலகம் என்பது அவர் வாக்கு. உலகத்தை ஆதிசேஷன் தாங்கலாம், எட்டுயானைகளின் முதுகிலே உலகம் நிலைகொள்ளலாம். ஆனுல்

''பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்''

''கண்ணேட்ட மென்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு''

என்பது வள்ளுவர் வாக்கு.

## 2. ஒரு ஞானப்பரம்பரை வாழையடி வாழையாக

ஹவாய்த் தீவிலிருந்து கலிபோர்ணியாவரை, இந்தோனேசியாவில் இருந்து ரிஷிகேசம்வரை எத்தனையோ சிந்தனையாளர்கள், ஞானிகள், மகான்கள், சித்தர்கள் காலத்துக்குக் காலம் தோன்றி மனிதகுலத்தை வழிநடத்தியிருக்கிருர்கள். ஏன் இறைதூதராய் வந்து சமயக்கோட்பாடுகளைத் தந்த தீர்க்கதரிசிகளும் இதற்குப் புறம்பானவர்களல்ல. கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியூஸியஸ், லியோட்டாசி (சீனு) மார்க்க அரேலியர் (உரோமாபுரி) உட்பட பாரதநாட்டில் அவதாரம்செய்த ஆதி சங்கரரில் இருந்து அரவிந்தர் ஈறுக கிருஷ்ணமூர்த்திவரை பலர் எமக்கு முன்னே காட்சியளிக்கின்றார்கள். இவ்வாறே நாம் வாழும் சிவபூமியாம் நமது நாட்டிலும் பலர். கடையிற் சுவாமிகளிலிருந்து கால்விட்ட பரம்பரை குடைச் சுவாமிகள் வழியாக இன்னும் வளர்ந்து நமக்கெல்லாம் வழிகாட்டும் ஒளிவிளக்காய்த் திகழ்வதை நிதர்ஸனமாகக் காணலாம். ஈழத்துச் சித்தர்களென்றாலும் சரி ஞானகோப் தாங்களென்றாலும் சரி அவர்களின் நெறிப்படுத்துகையிலே தான் வாழ்ந்தார்கள், வாழ்கிறோம். வருங்காலச் சந்ததிகளும் அதை மாற்றமுடியாது. இவ்வாறு எமது மத்தியில் மக்களோடு மக்களாய்த் திரிந்து கடைஞனும் கடைத்தேற வேண்டுமென்ற கோட்பாட்டுடன் வாழ்கின்ற சிலரிற் சிலரை நாம் காண்கிறோம். இன்னும் சிலர் இலைமறை காயாக வாழ்கிறார்கள். எமது சமகாலத்தில் கண்கண்ட தெய்வங்களாய் அமைந்தவர்களில் ஒருவர்தான் திருவாசக சுவாமிகள் எனப் போற்றப்படும் சபாரத்தினம் சுவாமிகள்.

கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், அப்பாத்துரை சுவாமிகள், சின்னச்சுவாமிகள், பொன்னப்பா சுவாமிகள், பழக் கடைச் சுவாமிகள், யாழ்ப்பாணச் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், முத்துக்குமார சுவாமிகள், சடைவரத சுவாமிகள், நாகலிங்கப்பரதேசி, செல்லாச்சியம்மையார், சடையம்மா, கந்தையா சுவாமிகள், (குடைச்சுவாமிகள்) வயிரவியார் சுவாமிகள், சின்னத்தம்பிச் சுவாமிகள், மார்க்கண்டுச் சுவாமிகள் என்றெல்லாம் அந்த ஞானபரம்பரை எங்கள் முதுசொம் ஆகும். இன்னும் வடிவேற்சுவாமிகளையும் (கிளிநொச்சி) மகாதேவசுவாமிகளையும் (ஊதுபத்திச் சுவாமியென அழைப்பர்) அதிகமாய் வல்லிபுரக் கோவிலடியிலும் நல்லூர்த் தேரடியிலும் அவரைக் காணலாம். நாம் மறக்கவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. கோணேஸ்வரத்திலிருந்து கேதீஸ்வரம்வரை

சிவபூமியாய்த் தெய்வமணம் கமழும் நம்நாட்டுச் சிவ தலங்களுள் பாடல்பெற்ற தலம் திருக்கேதீஸ்வரமும் திருக் கோணேஸ்வரமும் ஆகும். சோழப்பெருமன்னர் காலத்திற் சோபித்ததோடு திகழ்ந்தது கேதீஸ்வரம். ஆரூரரும் ஆளுடையபிள்ளையும் பதிகம் பாடிய க்ஷேத்திரமிது. கதம்பநதி யெனப் பண்டு வழங்கி இன்று அருவியாறென அழைக்கப் படும் நதியின் பாலாவிக்கிளை சங்கமமாகும் இடப்பகுதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. மாந்தை மாதோட்டம் பெய ரளவில் வேறுபடினும் இடத்தால் மாறுபடாது. தன்னெழில் மாற்றுக்குறையாமல் வானுற வளர்ந்த கோபுரத்தினுட் பொருளாய் அம்மையப்பன் எழுந்தருளிய தோட்டம் தொன்மையானது.

மாதுவட்டாவுவக்கும் மாதோட்டத்துக்கும் வேறுபடுத்த முடியாத பிணைப்புண்டு. இதை வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டம் என போற்றும் திருமுறை. மாசந்தையா யும் துறைமுகப் பட்டினமாயும் திகழ்ந்தது மாந்தை. திருப் பெருந்துறையும் இதுதானென்ற ஆய்வாளரின் கருத்தும் நோக்கற்பாலது. மேலை கீழைநாடுகளுடன் வணிகத் தொடர் பால் நெருங்கிச் செழிப்புற்றிருந்த மாந்தர் போற்றும் மாந்தை இன்று பெயரளவில் நிற்கிறது. சங்க இலக்கியங் களில் மாந்தைக்குத் தனியிடம் உண்டு.

''இரைதேர் நாரை எய்திய விடுக்குந்
துறைகெழு மாந்தையன்ன இவணலம்''

''குரங்குகளைப் புரவிக் குட்டுவன்
மாந்தையன்ன......''

''மாந்தையிலே வாழு மகுடத் தியாகி......''

''நிரைபொரு வேல் மாந்தைக்கோவே''

''பெருந்தோட்ட மன்னர் ஆர்ப்பிசை வெருஉங்
குட்டுவன் மாந்தையன்ன''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் ஏடுகளிலிடம்பெற்ற மாந்தையில் மன்னார் முத்துக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. சிலாபத்துறை முத்துக்குப் பேர்பெற்றதாயிருந்ததும் பொருத்தமே. மாந்தை முத்தங்கள் என்னும் பிரயோகம் புலவர் நாவில் நடமாடியுள்ளமையைச் சங்கநூல்களிற் பரக்கக் காணலாம். இவ்வாறு புகழ்பூத்த புண்ணியபூமியை நாடி - கோணேஸ்வரத்திலிருந்து ஓடிவந்தார் ஒருவர்.

## 4. நிலைப்பாடும் நெஞ்சுறுதியும்

இராமேஸ்வரத்தில் இருந்து சிதம்பரத்துக்குப் பாத யாத்திரை செய்த பக்திவைராக்கிய சிந்தையுள்ளவர். தில்லைக்கூத்தன் சந்நிதியில் ஒரு அநுபூதிச் செல்வரால் ஆட்கொள்ளப்பட்டவர். சிலகாலம் அங்கே தங்கி தும்பை மாலையால் எடுத்த பொற்பாதத்தை அர்ச்சித்த பெரும் பேறு பெற்றவர். அர்ச்சனை வயலுள் அன்புவித்திட்டுத் தொண்ட உழவர் ஆரத்தந்த அண்டத்தரும் பெறன் மேகன் வாழ்க'' என்றெல்லாம் பாடிப் பரவசமானார். பல முறை மாணிக்ககங்கையைத் தேடிநடந்தவர். பழுத்த அநுபவமும், பக்திவீறும், ஆத்மீக தாகமும், விடுதலை நாட்டமும் இழுத்துச் சென்றமையாலோ என்னவோ, கேடிலாத கேதீச்சரத்தை அடைந்தாற் பாவம் வினையறுப்பான் பாலாவியின் கரைமேல் இருப்பவன் என்ற நம்பிக்கை ஒளியில், பாதைபிடித்து விரைந்தார். தேவன் எனை ஆள்வான் என்று அத்தலத்திலேயே தங்கிவிட்டார். இது நடந்தது சுமார் நான்கு தசாப்தங்களுக்கு முன்னையமையலாம் அவர்களங்கே சென்றபோது ஆலயத்தில் அர்ச்சகர், பூத்தொண்டு செய்யும் பண்டாரம், கணக்கப்பிள்ளை என்னும் மூவர் ஏற்கெனவே இருந்தனர். இவர் நான்காவது ஆளாயங்கு சேர்ந்தார். வேறு மனிதநடமாட்டம் அங்கே மிகக் குறைவான காலகட்டமது.

## 5. தொண்டும் தொழிலும்

ஏதோ கீதாவாக்கின்படி முடிந்த தொண்டாற்றிக் கொண்டிருந்த அந்த மஹானுபாவர் கோயில் தென்பாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தில் ஓராலநிழலில் குடிசையமைத்து, மேலுமொருபடி தம்மையர்ப்பணித்தார். பிறருக்காகப் பர நலத்தோடு பக்குவவாழ்வு மேற்கொண்டார். நெடிய உறுதியுள்ள தோற்றம், இடுப்பிலே தூய வெண்மையான ஆடை, தோளிலே சால்வை, நறுக்கிவிட்டாலன்ன பல்வரிசை, தாடியோ, கமண்டலமோ, காவியோ பேணாத துறவு. கைகளிலே திருவாசகம், மெய்யிலே விபூதி, மடியிலே வெற்றிலைச் செல்வம், அடிமுதல் தலைகாலும் அரவணைக்கும் பண்பு, பேச்சிலும் மூச்சிலும் மணிவாசகம், முகத்திலே களை, கண்களிலே ஒளி, மனத்திலே தேடுதல் வேட்கை, மறந்தும் புறந்தொழா வாழ்வு, கொடுமை கண்டு எப்போதாவது எழும் காழ்ப்பில்லாத சினம், சாத்திரங்கள், தோத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் தெரிந்தும் காட்டிக் கொள்ளாத ஆன்றவிந்தடங்கிய கொள்கை. வாதவூரடிகள் புராணத்தை அனுபவித்து திருவாசகத்தைத் தாரகமாகக் கொண்ட இலட்சியம். பாவெனப்படுவது அவன்பாட்டே (திருவாசகம்) என்ற கெச்சிதத்துடன் கூடிய ஈரமும் வீரமும் கூடிய துறவுநிலை. உணவு போடவேண்டுமே, கறவைகள் வளர்த்தார், கமம்செய்தார், காளைகள்கொண்டு உழுதார். வண்டில் வைத்து ஏற்றி இறக்கினர். இருக்கும் குடிசையைச் சுற்றியும் வீட்டுத்தோட்டம், அடியார்களையும் அன்பர்களையும், துறவிகளையும் ஆதரித்தார், பழைய அடியார்களின் பரிசத்தால் பரிமள புஷ்பமலராய் மகிழ்ந்தார். ஒரு திருப்தி. உணவைக் குழைத்து வழங்கி, குழைத்த சொன்மாலையையும் கலந்து பரிமாறினர். செவிக்கு உணவு கிடைத்தது. பசிக்கு உணவை மறந்தார்கள் அடியார்கள். அக்காலத்திலே சுவாமிகளோடு ஒட்டி உறவாடிய ஒருவர் சிந்தாமணி என்பவர் (மண்டைதீவு) அவரும் சுவாமிகளின் அடிச்சுவட்டிலே நடந்து திருவாசகத்திலே லயித்தார். இவர் இல்லறவாசியானுர். பின் இன்னொருவர் வயிரவியார். உடனிருந்து தோட்டம், கமத்தைக் கவனித்தவர். ஒருமுறை புகையிலை நட்டு, குடிலிலே உணர்த்தும் வேளை, நெருப்புப் பிடித்து முளாசி எரிகிறது. அப்போ அப்பெரியார் கந்தரநுபூதியைப் பாடிப்பாடி, கைகொட்டி அந்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியை வலம்வந்துகொண்டிருந்த காட்சியே அதியற்புத மானதென்று சுவாமிகளே சொல்வார்கள் ''கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலினர், ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலர்'' என்று சேக்கிழார், அடியார் பெருமை பேசுகிருரே, அந்த வரிசையைச் சேர்ந்தவர் தான் வயிரவியார். திண்ணைப் பள்ளிக்கூடத்தையே காணுத அவரின் வாயிற் தோத்திரங்கள் நடனமிடும். அப்பெரியார் உடலம் விட்டுச் சில ஆண்டுகளாயின. அவருக்கு இலங்கையிலே தெரியாத மகான்களே இல்லை. கழறிற்றறிவார்போலச் சிவனடியார்களைக் கண்டால் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கும் பெருமையில் மிக்கவர் அவர்.

## 6. திருவாசக மடமும் தீனர்கள் நேசமும்

இவ்வாறு வாழ்ந்த (சபாரத்தினம்) அடிகளாருடைய உள்ளத்திலே திருவுடைய கருவொன்று அரும்பியது. அது திருவாசக மடமாய் மலர்ந்து மணம் கமழ்கின்றது. பிற்காலத்திலே ஆலயத் திருப்பணிகளை மேற்கொண்ட சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் சுவாமிகளிலே பெருமதிப்பு வைத்திருந்தார். திருவாசக மடத்தை உருவாக்கிய பின்பும் தான் முதலமைத்த குடீரத்தையே தனது வாசஸ்தலமாகக் கொண்டார் சுவாமிகள். இதிலிருந்தே அவருடைய திருவாசக உறைப்பை உணரமுடிகிறதன்றே. அருட்செல்வம் முதற்செல்வம். பொருளும் பூமியும் அருளுடனிணைந்து திருமாலின் சக்திகளாயின. எல்லாமவனுக்கே அர்ப்பணமென்றவனுக்கு அபயம். பயமில்லை.

அருட்செல்வர் அருளம்பல சுவாமிகள் பாரதியின் குருவான வரிசையில் அவரை யாழ்ப்பாணச் சுவாமியென்று தனது பாரதி அறுபத்தாறில் பாடுகிருர். அவரை மகாகவி பாரதியார் ''தேவிபதம் மறவாத தீரஞானி'' என்று பாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. யாழ்ப்பாணத்துச் சுவாமியின் புகழ்

"கோவிந்த சாமிபுகழ் சிறிது சொன்னேன்
குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பா ணத்தான்
தேவிபதம் மறவாத தீர ஞானி
சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்
பாவியரைக் கரையேற்றும் ஞானத் தோணி
பரமபத வாயிலெனும் பார்வை யாளான்
காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயும்
கழனிகள்சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்
............ ...
மங்களஞ்சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்
வானவர்கோன் யாழ்ப்பாணத் தீசன் தன்னைச்
சங்கரனென் றெப்போதும் முன்னே கொண்டு
சரணடைந்தால் அது கண்டீர் சர்வசித்தி"

மஹா யோகசுவாமிகளும், தன் குருநாதனைச் "செல்லப்ப னென்ற சீமான்" என்று குறிப்பிடுகின்றார்.

தேர்முட்டிப் படிமேலே — கிளியே
செல்லப்ப னென்ற சீமான்
ஆர்வமுடன் இருக்கிறான்டி — கிளியே
அங்கு போவோம் வந்திடடி

இவர்களுடைய பாததூளியிலே மிதித்தவர் திருவாசகச் சுவாமிகளெனப் பிரபந்தங்கள் போற்றும் சபாரத்தினஞ் சுவாமிகள் – தொண்டர் - தொண்டர் – தொண்டர்தம் தொண்டரென்ற ( திருவாய்மொழி 7-1-11 ) சடகோபரின் வாக்குப்படி தொண்டரடிப் பொடியான திருவாசகச் சுவாமிகளை இரு பிரபந்தங்கள் போற்றியுள்ளன.

இவ்விரு நூல்களையுந் தந்தவர்கள் பொன்கொடுதீவைப் (இதுவும் யோகர்சுவாமிகள் சொன்ன பெயர் புங்குடுதீவுக்கு) பிறப்பிடமாகக் கொண்டவர்கள். ஒருவர் பெரும்புலவர் ச. இ. சதாசிவம்பிள்ளையவர்கள். மற்றவர் பக்திமான் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள். இதோ அப்பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

............................ தொண்டருறை
தேர்வீதி மார்க்கம் திரும்பி வலம்வருங்கால்
ஆரும் பெருந்தவத்தோன் அன்புருவோன் ஈரநெஞ்சன்
தெய்வ நலஞ்சேர் திருவாசகச் சாமி
செய்யசபா ரத்தினந்தாள் சென்றுபணிந்(து)-உய்யத்
திருவா சகமடத்தைச் சேர்.

(71, 72, 73 திருக்கேதீச்சரநாதர் கிள்ளைவிடு தூது)

"மேற்றிசையை நோக்கின் விரவும் மரச்சோலை
தோற்றுமதன் நாப்பணோர் தொல்குடியில் — நோற்றுயரும்
அன்புருவன்! என்புருவன்! ஆன்றதிரு வாசகத்தேன்
இன்புடனே ஈந்துவக்கும் ஏற்றமுளான் — தென்புதர
வீற்றிருக்கும் யோகி விரதிசபா ரத்தினமாம்
சாற்றரிய சாமிகுரு தாள்பணிந்து — பேற்றிலுயர்

(திருக்கேதீச்சரநாதர் வண்டுவிடு தூது பக். 12)

மழைகூட ஒருநாளில் தேனாகலாம் (மணல்கூட ஒருநாளிற் பொன்னாகலாம்) என்னும் கவிஞன் வாக்குக்கு இலக்கியம் தான் சுவாமிகள். தேனாறு முட்டிமோதிக்கொண்டு வேக வதியாய்ப் பாய்கின்றது. எங்கே தொட்டாலும் பட்டா லும் நக்கினாலும் தேன்தான். வாதவூரெனும் பருவ மேகம் தேன்மாரி பொழிந்தது. 51 அருவிகளாய்ச் சலசலத் துப்போய்ப் பெருங்கங்கையாகப் பிரவாகித்து ஓடுகிறதே எவர் எப்போது தொட்டுச் சுவைத்தாலும் தித்திக்குந் தேன் ... மட்டுமல்ல தெவிட்டாத தேன். அதிலே தோய்ந்து எழுந்த சபாரத்தினமென்னுங் கார்முகில் சொரிகின்ற திரு வாசகத் தேன்மழை செவிவழி சிந்தைவாய்ப் பாய்ந்து ஊனும் உயிருங்கலந்து உவட்டாது இனிக்கின்றது. தாம் பெற்ற இன்பம் தம்மவர் எல்லாம் பெறவைக்கிறார். அத னால் கடைஞனுங் கடைத்தேற வேண்டுமென்பது அவருடைய இலட்சியம். பேசிப்பேசி நாத்தழும்பேறியும் ஏறவில் லையே என்ற அங்கலாய்ப்பு. தேனுக்குளின்பம் சிறந்திருந் தாற்போல் வாசகத்தின்பம் அவர் வாக்கிற் கேட்பதும் பேரின்பமும் பாக்கியமுமாம். திருவாசகச்சுவாமிகள் நம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோடு உறவாடும் செல்வம். இச்செல்வத்தை அவருக்கு உவந்தளித்த மானசீகமான குருநாதர் மறவன்புலவு சின்னத்தம்பி சுவாமிகள் ஆகும். இவருக்கு தொண்டின் உறுதுணையாக இருந்து சேவைசெய்த பக்திமதி பஞ்சாட்சர அம்மாவை எவரும் மறக்கமாட்டார்கள். திருவாசகத்தின் உட்பொருள் தெரிந்த வரம்பெருமாட்டி.

## 7. பண்சுமந்த பாடல் திருவாசகம்

குருர் ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர் தேவோ மஹேச்வர /
குருஸ் ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம: /
மைவிடா தெழுநீல கண்டகுரு வேவிஷ்ணு
வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
மதங்கடோறு நின்ற குருவே
கைவிடா தேயென்ற வன்பருக் கன்பாய்க்
கருத்தூ டுணர்த்து குருவே'' — தாயுமானூர்

'ஸ்வம் என்றால் சொத்து: உடைமை என்று அர்த்தம் ஸ்வாமி என்றால் சொத்துக்குரியவன் உடைமையாளனென்று பொருள். மகான் இராமானுஜர் திருவாய் மொழியிலே ஊறிய வள்ளல். அவரை உடையவர் என்றே அழைப்பர். திருவாய் மொழிக்கு ஒப்பானது திருவாசகம். திருவாசகத்தை உடைமையாய்க் கொண்டவரை திருவாசக சுவாமி என்றழைப்பதும் சாலப்பொருத்தமே. மாணிக்கவாசகர் தந்த வாசகத்தில் 51 பதிகங்கள் 656 திருப்பாடல்கள். பண்சுமந்த பாடல்களவை (திருவம்மானை) மண்சுமந்தவன் கைப்பட எழுதியவை. இப்பெருமையை

''பண்சுமந்த பாட்டினுக்கும்
பாவைதந்த பிட்டினுக்கும்
மண்சுமந்த சோதி மணிமுடியும்''

என்று தமிழ்விடு தூது பேசுகிறது. திருவாசகத்தை எழுத்தெண்ணிப் படித்து, அகப்பொருளாக உரைபேசுபவர் இன்றும் திருவாசகமும் கையுமாய் விளங்குகிறார். கதிர்காமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் சண்முகவடிவேல் (கொடுக்க) கிடைத்த காவியாடை யும், அன்பர்களளித்த உருத்திராக்கமும், வெண்தாடியும் பொலிய, சிவவேடத்துடன் திகழும் அவர் பிள்ளைப் பாசத் துடன் எல்லோருக்கும் திருவாசக அருளமுதமள்ளியளிக்கிருர். இந்நூலாசிரியருக்கு திருவாசகத்தை உணர்த்திய குருநாதரு மவர்களே. எனவே காலமுண்டாகவே காதல்செய்துய்மின் —மூலபண்டாரம் வழங்குகின்றுன் வந்து முந்துமினே என்ற திருவாசக வாக்குக்கமைய நாமும் மாசின்மணியின் மணி வார்த்தை பேசி இருந்தெம்மை ஆளும் இறையடியைச் சிந்தித்துப் பிறப்பறுப்போம் எம்மோடு ஒட்டி உறவாடும் சுவாமிகளிடம் திருவாசகம் கேட்டுச் சிந்தை குளிர்வோம்.

"பற்றுங்கவை அற்றீர் பற்றும்
பற்றுங்கது பற்றி
நற்றுங்கதி அடைவோமெனிற்
கெடுவீ ரோடிவம்மின்
தெற்றுர்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை இறைசீர்
கற்றுங்கவன் கழல்பேணின
ரொடுங் கூடுமின் கலந்தே" — திருவாசகம்

"ஒன்றிநீர்கள் வந்துரைமினே நுமக்
கிசையுமா நினைந் தேத்துவீர்
குன்றிபோல்வ தொருருவரோ குறிப்
பாகிநீறுகொண் டணிவரோ
இன்றியேயில ராவரோ வன்றி
உடையராய் இல ராவரோ
அன்றியே மிக வறவரோ நமக்
கடிகளாகிய அடிகளே".

— சுந்தரர் தேவாரம்

## 8. சபாரத்தினம் ஆறுமுகம்

கீரிமலை புனித நீர்ச்சுனையுடைய மண். இங்கேயோர் சமாதி குழந்தைவேற் சுவாமியுடையது. அங்கே ஓர் இரவு படுத்திருந்தார் அடியாரொருவர். இரவு சாமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் பின் ஓர் சொப்பனம் கண்டார். அவருடைய தாயார் இறக்க. உடனே எழுந்து மாவிட்டபுரம் வழி காங்கேசன் துறை வீதி மார்க்கமாக நடந்துவந்தார். விடிந்ததும் விடியாததுமான கருக்கல்வேளை சுண்டிற்று. பலார்பற்றி விடிய யாழ்ப்பாணம் பெரியகடையை வந்துசேர்ந்தார். ஆறுமுகசுவாமியின் நினைவுவர அவரைக் காணப்போனார். ஆறுமுகசுவாமி பெரியகடையின் வடபுறத்தேயுள்ள செட்டியார் ஒருவர் வீட்டிற் தங்கியிருந்தார். போனவுடனே உன்ரை கோச்சி செத்தால் உனக்கென்னடா என்று சொல்லி இரு என்றார். இருந்துவிட்டார் போனவர். ஒன்பது மணியாயிற்று. 4 பணம் கொடுத்து போய் தேத்தண்ணி குடிச்சிட்டுவா என்றார். சரியென்று சுவாமியின் சொற்படி நடந்து மீண்டுமவர் முன்னே வந்திருந்து சம்பாஷித்துக்கொண்டிருந்தார். வீட்டுக்காரரிடம் இவனுக்குச் சாப்பாடு கொடுங்கோ என்றார். மத்தியானம் 2 மணியளவில் சாப்பாடுமாயிற்று. பி. ப. 4 மணியளவில் நீ போ என்றார். சரியென்று விளம்பினரந்த அடியார். நடந்து தன் பிறந்தவீட்டிற்கு பாண்டியன்தாழ்வு போய்ச் சேர்ந்தார். அப்பொழுதுதான் இறந்தவருக்கான கிரியைகள் நடந்துகொண்டிருந்தன. போனவருமதிலே பங்கு பற்றிச் சுண்ணமிடித்துத் தன் கடமையைச் செய்தார். இவர்தான் சபாரத்தினமடியார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அவரிடமெல்லாரும் எப்படி வந்தீர்களென்ற போது, அறிவித்தல் கிடைத்தது, மண்ணில் பூத்துப் பொலிந்தவர் தான் வந்தேனென்றார். திருவாசகச்சுவாமி என்றழைக்கப்படும் சபாரத்தினம் சுவாமிகளுடைய தந்தையார் சின்னத்தம்பி (சிவகுரு) அல்வாயைச் சேர்ந்தவர். தாயார் பாண்டியன்தாழ்வு சின்னத்தங்கம். 1904ம் ஆண்டு ஆங்கில மாதம் பங்குனி 28ல் இப்பெரியார் ஜனனமானார். (வெள்ளிக்கிழமை திருவாதிரை நட்சத்திரம் சுபகிருது வருசம்) ஆசிரியத் தொழில் பார்த்தவர். இல்லறத்தில் வாழ்ந்து பாரியார் இறந்ததும் துறவறம் பூண்டு பழைய அடியாராகி யாத்திரை மேற்கொண்டு திருவாசகத்திலே ஈடுபாடுடையராய் வாழ்ந்துகொண்டிருக்குமன்பருக்கு சுமார் 83 வயதாகிறது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமிகளின் கருத்துத் தேன்துளிகள்

- என் சாவேன் நான் சாவேன். (சதகம் 18) என் செத்து நான் சாவேன். இதுவே நான் எனது அற்ற இடம். அதுவே திருவடி.
- பொன்னநகர் புகவேண்டும் நாமெல்லாம் (புகுவதாவதும்)..... போரேறே நின்.........
- மாணிக்கவாசகர் இறைவனையடைவதில் இறுக்கமும் உறுதியும் கொண்டிருந்தார். இறைவனெதிராக நின்ருல் திருவடிப் பேறுபெறலாமென்ற நோக்கில், நினைப்பே போதும் நமக்கு.
- உடம்பு தேவைதான் ஏன்? பதிலை சதகம் 56ல் காண்பீராக.
- வாக்கினுற் பேசுவது வீண் பொழுதுபோக்கு. நினைப்பு மதி, பேசுவது விதி. திருவாசகம் மதிகொண்டு தொழுதல், அப்போது விதி ஏடு கிழியும். கூடினது நினைப்பு. நினைப்பதாக சிந்தை செல்லுமெல்லை.
- மூர்க்கம் இருக்கும்போது சிந்தை, செய்கை, கேள்வி, வாக்கு வரும்.
- ஆளுமட்டும் அழுகை. ஆண்டிட்டால் அவன் நாணுயிடுவன்.
- திடமாக ஒப்புக்கொடுக்க வேண்டும். காதல் கூடியவர் தானவனைக் காணலாம். தன்னிழப்புக் கொண்டாலல்லது அவனைக் காணமுடியாது.
- ஏலாத்தன்மை வந்தாற்ருன் அழுகைவரும். மெய்யன்பு ஒன்றுபட்டது. இரண்டுபட்டது பொய்யன்பு.
- இனசனம் ஏச நாம் கொள்கையை விட்டுவிடுவோம் எனவே சேர்க்கை வாசனை அடியார் கூட்டமாய் இருக்க வேண்டும்.
- நான் எனது அற்ருலன்றித் தோன்ருது. ஞானநாடகம் அடியாரோடு இருக்கும்போது பிறக்கும்.
- இருதலைக் கொள்ளி எறும்பு ஆன்மா. இருதலை நல்வினை தீவினை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அடியவர்கட்கண்மையன். ஐம்புலனுக்குச் சேய்மையன்.
- அம்மஹானைப் பாடுவதே அம்மானை.
- மாணிக்கவாசகர் மன்னனளித்த பலகோடி பொன்னையும் செலவுசெய்தார். அது அவருக்குத் தகுதியற்றது, ஆனால் அவர் தன்செயலற்று நின்றபோது செய்தார். அதை என்னுளச் செயல் மாண்டவாபாடி எனப்பாடியுள்ளார்.
- திருவாசகமென்னும் தேனாறு பாய்கிறது. எங்கே நக்கிக் குடிக்கிறதென்று தெரியவில்லை.
- அரசனிடத்துப் போவதும், காண்பதும், கதைப்பதும் அரிது. அப்பனிடத்தில் வாதாடி கேட்டுவாங்கி பேசி ஏசி இல்லையென்றாலும் பறித்துவாழலாம். அன்பர்க்கரசன், அடியவர்க்கு அப்பன். அப்பன் உழைத்துக் கொடுப்பான். அரசன் வரி அறவிடுவான் (அரசனே அன்பர்க்கு.........) அரசன் ஆள்பவன், அன்பர் உழைக்க வேண்டும்.
- அருள்பெற்றால் பூரணத் தொட்டியுள் வாழலாம்.

* *

திரு. கனகலிங்கம் என்னும் ஓர் அடியார், "தியானம்" செய்வது எப்படி? என்பதை அறிவதற்காகச் சுவாமிகளிடம் போனார். சுவாமி அவரை இருத்தி, நீங்கள் வீட்டில் தியானம் செய்கிறீர்களா? என்றும் தியானம் செய்வது எப்படி என்று தெரியுமா எனவும் கேட்டார். முதன் முறையாகப் போனவர் நான் நினைத்துக்கொண்டுபோனதைக் கேட்டுவிட்டாரே என்று ஆச்சரியப்பட்டு இப்போ அநேகமாக சுவாமியைச் சந்திக்கத் தவறுவதில்லை.

ஒரு அடியாள் அவருக்கு உணவு கொடுத்து நெய்யையும் விடும்போது, "நெய் இல்லா உண்டி பாழ்" என்று சொல்லிக் கருத்தைக் கேட்டார். சாப்பாட்டிற்கு நெய் முக்கியம் என்ற சாதாரண கருத்தைச் சொன்னார் அவர். உணவு கொடுக்கும்போது உள்ளம் நெய்து உள்ளன்போடு கொடுக்க வேண்டுமென்ற உயர்ந்த கருத்தையும் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருக்கேதீஸ்வரச் சுவாமி

— க. சி. குலரத்தினம் —

தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய் கேதீச்சரம் கேடிலாதது, கேது பூசித்தது, தேவாரம் பாடப்பெற்றது, தேன்பொந்து என்று ஆறுமுகநாவலர் போற்றியது, கௌரியம்பாள் சமேதராய்க் கேதீசுவரநாதர் எழுந்தருளியுள்ளது, இதிகாச காலத்துப் பெருமை வாய்ந்தது, பழைய வரலாற்றுப் புகழ்பெற்றது.

சிவபூமி என்னும் இலங்கையில் சித்தர்கள் தோன்றித் திருவருள் வெள்ளம் தேங்கவைத்தனர். சித்தர்கள் வாழ்வு சிவவாழ்வு, அது தமிழ் வாழ்வு. அன்றும் திருவுருவம் காணுமலே ஆட்பட்ட பெரியவர்கள் சூழ்ந்திருந்த திருக்கேதீச்சரத்தில், எம்பெருமானை நம்பி அங்கே சென்று பாம்புகளோடும், குரங்குகளோடும் காட்டுவாழ்வு வாழ்ந்தவர்களுள் ஒரடியார் தம் பிள்ளைத் திருநாமத்தோடேயே இன்றுவரை வாழ்ந்துவருகிறுர்.

முற்றுந் துறந்த முனிவராய்ப் பற்றற்றுப் பரமனையே பாடிப் பாடிப் பக்தர்களைப் பணியவைக்கும் பான்மை அவரின் தனிப்பட்ட பண்பாடு. திருக்கேதீச்சரத்துப் பழைய அடியார்கள் வரிசையில் எட்டாந் திருமுறையாய திருவாசகத்தை முன்னிட்டு வழங்கும் அவரின் திருநாமம் திருவாசகம் சபாரத்தின சுவாமியாகும். திருக்கேதீஸ்வரம் சபாரத்தின சுவாமி எனவும் அவர் வழங்குவர். திருக்கேதீஸ்வரத்தில் திருத்தொண்டர்கள் சூழ்ந்து வாழ்ந்து பணிசெய்வதற்குப் பல மடங்கள் உண்டு. அவற்றுள் மேற்கு வீதியிலமைந்த திருவாசக மடத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் சபாரத்தின சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதநின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினையடை யாவே, பரிந்த சிந்தையராகிப் பேணவல்லார் தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே, சிட்டன்னமை யாழ்வான் திருக்கேதீச்சரத்தானே, தேவனெனையாள்வான் திருக்கே தீச்சரத்தானே எனவரும் தேவாரத் திருமுறைத் தொடர் களில் நம்பிக்கைகொண்டு அங்கே வாழ்ந்து, தொண்டுபுரிந்து பக்குவப்பட்டவர் இவர். இவரின் பழுத்த அனுபவம் பக்தி மயமானது, எம்மைப் பழுக்கவைப்பது. திருவாசகம் முழுவ தையும் மனப்பாடமாக்கி எதற்கெடுத்தாலும் அதில் ஆதா ரம் காட்டி அன்பர்கள் மனதை உருகவைப்பவர். இவர் பாடும்போது பாடல்களின் பயன் வெளிப்படையாக விளங் கும். மனமுருகப் பாடும்போது கேட்பவர் இதயம் மலரும்.

திருமுறைகளை நன்முகப் படித்து நாடனமாளுற் சைவ சித்தாந்த ஞானம் எளிதில் கைவரும். சைவசமய குரவர் களுக்கு முதலில் வணக்கஞ் சொன்னபின், சந்தானகுரவர் களுக்குச் சொல்லவேண்டும். சைவசித்தாந்தம் நன்முக விளங்கியவர்களுக்கு வேதாந்தம் கற்றல் மிகவும் சுலபம். திருமுறைகளில் வெளிக்கருத்தின் வேமுய் உட்கருத்து நிறையவுண்டு. அந்த உட்கருத்தே ஆன்பமானுபவத்துக்கு உரியது. பிறவி எடுத்ததன் நோக்கம் ஆன்ம ஈடேற்றம் பெறுதலே என்பதை மறந்துவிடலாகாது என்பர். சுவாமி களின் பழுத்த அனுபவம் அவரைப் படிப்படியாகப் புடம் போட்டு உருவாக்கியது. இன்று நாம் கண்காண எங்கள் மத்தியில் நீறு பூசி, கண்டிகை அணிந்து, காவியுடுத்து, வற் றிய உடம்போடு காட்சி தருகிறுர்.

அல்வாய் ஊரின் சின்னத்தம்பி என்பார், பாண்டியன் தாழ்வைச் சேர்ந்த சின்னத்தங்கம் என்பாரை மணந்து, 1904ஆம் ஆண்டுப் பங்குனித் திருவாதிரை நாளிற் பெற்ற செல்வக் குழந்தை சபாரத்தினம். கமவேலையில் ஈடுபட் டிருந்த தந்தையார் தம் மைந்தனை ஆசிரியர் வேலைக்குப் படிக்கவைப்பதற்குக் கொழும்புத்துறை கத்தோலிக்க பாடசாலைக்கு அனுப்பினுர். அங்கே எட்டாம் வகுப்பிற் சித்திபெற்று, ஆசிரியகலாசாலைப் பிரவேசப் பரீட்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் திறமையாகச் சித்திபெற்றபின், மதம்மாறுவதற்கு மறுத்து, ஆசிரியரை நோக்கி, "இனிமேல் பேய்க்கதை பேசாதீர்கள்" என்று ஆணித்தரமாகக் கூறிவிட்டு வெளியேறினார். சிலமாதங்கள் கொழும்புத்துறை சைவப்பாடசாலையில் ஆசிரியராய்க் கடமையாற்றிய வேளையில் பாடசாலைப் பரிசோதகருக்குத் தாளம்போடமறுத்து, அதனையும் உதறிவிட்டு முரட்டுத்தனம் வழிகாட்ட வாழ்ந்தார்.

இவ்வாருக இடையிடை கதிர்காமம் சென்றுவந்த வழக்கத்தில் ஒருமுறை ஆங்கொரு மூலையில் தியானம் செய்ய இருந்ததும், அந்த இடத்தைவிட்டு எழுந்திருக்க முடியாமல் இருந்ததும் ஓரினிய அனுபவம் என்ருர். பின் தன்னையறியாமலே மாணிக்ககங்கையில் விழ்ந்து நீராடி, ஈரம் புலருமுன்பே மலேயேறி, வழியில் பணப்பை, சால்வை போனவிடம் தெரியாமல் நின்றபோது, மலேயில் நால்வர் நெருப்பு மூட்டிக் குளிர்காய்ந்தவாறு உரையாடக் கேட்டு, அவர்களின் உரையைக் கேட்டு, உடற்பாரம் குறைந்த நிலேயில் மலேயை விட்டிறங்கிவந்தமை இனிய அனுபவமாயிற்று.

சுவாமிகளின் பழுத்த அனுபவங்களுள் ஒன்று, திருக்கேதீஸ்வரத்தில் பாம்புகளோடும் குரங்குகளோடும் நன்கு பழகி வாழ்ந்தமை. ஒருநாள் மணியடித்துக்கொண்டு நின்ற வேளேயில் பெரிய பாம்பு ஒன்று மேலேயிருந்து இவருடைய தோளில் மாலேபோல் விழுந்துகிடந்தமை. இவர் மடபரிபாலனஞ் செய்துவந்த காலத்தில் யாரோ ஒருவன் சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்டவனுய் அனுசாரமாக அங்கே ஒழுகினுனுக, அவனே இவர் வெளியே இழுத்துப்போன வேளேயில், "மடைவேலே செய்யவோ மடங்கட்டினுய் மடையா"? என்று தம் கன்னத்தில் அடித்துவிட்டு மறைந்ததாகவும், தாம் அன்றுதொடக்கம் முரட்டுத்தனத்தைவிட்டுச் சாந்தமாயிருக்கப் பழகியதாயும் குறிப்பிட்டார்.

சுவாமிகள் திருமணம் செய்து பிள்ளேகள் இல்லாமலே மனேவி மறைந்ததும் துறவறமேற்பதற்கு வாய்ப்பாயிற்று. சுவாமிகள் இளமையில் ஆரம்பவகுப்புகளிற் கல்விகற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில், பாண்டியன் தாழ்விலிருந்து கொழும்புத்துறைக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றுவந்தவர். அவர் வரும்போது அங்கே முச்சந்தியில் இலுப்பை மரத்தடியில் முனிவரைப்போல் ஒருவர் இருப்பதைக் காண்பார். அப்பெரியவர் இவரைக் கண்டதும் வாடா, வா, என்று வரவேற்று, கொய்யாப்பழம், மாம்பழம், நெல்லிக்காய் என ஏதாவது ஒன்று கொடுப்பது வழக்கம். பெரியவரின் திருக்கடைக்கண் இவர் மீது சிறப்பாகப் பதிந்துவந்தது. ஒருநாள் பெரியவர் வழக்கத்துக்கு மாருகத் தியானத்தில் இருந்தார். இவர் அவரருகில் சென்று, தாடியில் பிடித்து இழுத்து, "நான் வந்து நிற்கிறேன், நீ என்ன செய்கிருய்"? என்று கேட்டார். பெரியவர் தியானங் கலைந்து, அவரைப் பார்த்துப் புன்முறுவல் பூத்து நெல்லிக்காய் கொடுத்தார். இது பாலப்பருவ அனுபவம். இதனைக் கேள்வியுற்ற இவர் தந்தையார் பெரிய தடியெடுத்து நன்ருக அடித்து எச்சரிக்கை செய்ததை உணர்ந்த பெரியவர் உடனடியாகப் பாண்டியன்தாழ்வு சென்று சின்னத்தம்பியாரை நன்ருக ஏசிவிட்டு, இவரைத் தோளில் தட்டி, "நீ என்னிடம் வந்துபோ" என்ருராம். அந்தப்பெரியவர் வேறு யாருமில்லை, எங்கள் சிவயோகசுவாமிகளேயாவர். இது நடந்த காலம் 1910, 1911ஆம் ஆண்டாக இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஃது 43A, விதானையார் வீதி, யாழ். சுண்டிக்குளியிலிருக்கும் த. துரைராசா (கனகு) என்பவரால் யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org